57



உலக நாடுகள் வரிசை 2

# சுவீடன்

'சோமலெ'

உலக நாடுகள் வரிசை—2.

# சுவீடன்

'சோமலெ'

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு : ஜூன், 1960

உரிமை ஆசிரியர்க்கே.

விலை 50 காசு

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

நள்ளிரவிலும் சூரியன் தெரியும் நாடு சுவீடன். உலகப் போர்களில் நடுநிலைமை வகித்துப் பயனடைந்த நாடு சுவீடன். கூட்டுறவுக் கொள்கையை உலகுக்கு வழங்கிய நாடு சுவீடன். தீக்குச்சியையும் டைன மைட்டையும் கண்டு பிடித்து விஞ்ஞான வளர்ச்சி அடைந்துள்ளது சுவீடன். நோபெல் பரிசுகளைத் தருவது சுவீடனில்தான். இந்த நாட்டில் தமக்கு ஏற்பட்ட அநுபவங்களையும், இங்கு வாழும் மக்களின் வேடிக்கையான பழக்கங்களையும் ஆசிரியர் தெரிவிக்கிறார்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | சுவீடன் | ... | 5 |
| 2. | வரலாறு | ... | 7 |
| 3. | தட்பவெப்பநிலை | ... | 9 |
| 4. | மக்களின் குணங்கள் | ... | 11 |
| 5. | லாப் மக்கள் | ... | 16 |
| 6. | வாழ்க்கை வசதிகள் | ... | 19 |
| 7. | நகரங்கள் | ... | 22 |
| 8. | கல்வி | ... | 24 |
| 9. | நோபெல் பரிசு | ... | 27 |
| 10. | மொழி | ... | 28 |
| 11. | விஞ்ஞான முன்னேற்றம் | ... | 30 |
| 12. | கூட்டுறவு | ... | 32 |
| 13. | தொழில்கள் | ... | 33 |
| 14. | பொருளாதாரச் செழிப்பு | ... | 35 |
| 15. | இருப்புப் பாதைகள் | ... | 36 |
| 16. | பீங்கான் பொருள்கள் | ... | 38 |
| 17. | அரசியல் நிலை | ... | 41 |
| 18. | இந்தியாவும் சுவீடனும் | ... | 44 |

# 1. சுவீடன்

ஐரோப்பாக் கண்டத்தில் முப்பதுக்குமேற்பட்ட சிறு நாடுகள் உள்ளன. அவற்றுள் நெடுங்காலமாகப் பொருளாதாரத் துறையில் பெருவளர்ச்சி அடைந்துள்ளது சுவீடன் நாடாகும். உலகப்பெரும் போர்கள் இரண்டிலும் சிக்கிக் கொள்ளாமல், சுவிட்சர்லந்தைப் போலவே சுவீடனும் நடுநிலைமை மேற்கொண்டது.

பெருஞ் செல்வர்களே தொழில்களை நடத்தும் முதலாளித்துவம், உற்பத்தி சாதனங்கள் அனைத்தையும் அரசியலாரின் உடைமை ஆக்கிவிடும் கொள்கை ஆகிய இரண்டுக்கும் நடுவழியான ஒரு பொருளாதார அமைப்பும் சுவீடனில் பொருந்தி இருக்கிறது. இதுவே, இன்று பல நாடுகளில் பரவிவரும் கூட்டுறவு இயக்கம் ஆகும்.

இக்காரணங்களால், சுவீடனுக்கு நடுவழி நாடு என்ற பெயர் வழங்கி வருகிறது. லஞ்ச ஊழலும் கள்ள வாணிகமும் இல்லாத நாடு என்றும் அதே நேரத்தில் மக்களாட்சி நாடு என்றும் சுவீடனைக் குறிப்பிடலாம்.

இந்தியாவிலிருந்து 6,000 மைல் தொலைவிலுள்ளது இந்நாடு ; போயிங் விமானத்தில் (லண்டன் வழியே சென்று)

பத்து மணி நேரத்தில் இந்நாட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடலாம். நம் நாட்டில் காலை பத்து மணியாக இருக்கும் போது சுவீடனில் காலை ஆறு மணி ஆக இருக்கும்.

**நிலவளம்**

சுவீடனின் நிலப்பரப்பு 173,000 சதுரமைல்; தமிழ் நாட்டின் நிலப்பரப்பு 50,192 சதுரமைல். எனவே, சுவீடன் தமிழ் நாட்டைப்போல ஏறத்தாழ மூன்றரை மடங்கு நிலப்பரப்பு உடைய நாடு.

பனி படர்ந்த மலைகளும் ஏராளமான ஆறுகளும் கால்வாய்களும் ஒரு லட்சம் ஏரிகளும் 2,000 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையும் உடையது சுவீடன். சுவீடனின் பரப்பளவில் பாதிக்குமேல் காடுகள் இருக்கின்றன.

**மக்கள்**

இவ்வாறு இயற்கை வளம் நிறைந்த சுவீடனில் 75 லட்சம் மக்களே வாழ்கின்றனர்; அதாவது சேலம், கோவை இரு மாவட்டங்களிலும் வாழும் மக்கள் தொகையை விடக் குறைவு. சுவீடனில் ஆடவர், பெண்டிர் விகிதம் முறையே 10:11.

மூன்று குழந்தைகள் இருந்தால், அந்தக் குடும்பம் 'பெரிய குடும்பம்' என்று கருதப்படுகிறது. இதற்குக் காரணம் பெரும்பாலான குடும்பங்களில் ஒரு குழந்தை மட்டுமே இருப்பதாகும். இத்தகைய மக்கள் தொகைக் குறைவும் நிலப்பரப்பு மிகுதியும் சுவீடனின் செல்வம் என்று சொல்லலாம். சுவீடனின் பரப்பு தமிழ் நாடு, கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்களின் பரப்புக்குச் சமம்; இந்த மாநிலங்கள் யாவும் கோவை-சேலம் மாவட்ட மக்களுக்கு மட்டுமே சொந்தமாக இருந்

தால் அவர்கள் எவ்வளவு செழிப்பாக, செல்வமாக இருப்பார்கள்? அதுதான் சுவீடிஷ் மக்களின் நிலை.

## 2. வரலாறு


சுவீடிஷ் மக்கள் நடு ஆசியப் பகுதிகளிலிருந்து வந்ததாக வரலாறு உண்டு. சுவீடன் என்பது ஆங்கிலச் சொல். 'ஸ்வெரிஜே' என்பதே இந்த நாட்டின் பெயர்.

ஆறும் நூற்றுண்டு முதல் சுவீடிஷ் மக்கள் குடியேற்ற வாணிப முயற்சிகளில் முனைந்தனர். வடக்கு ரஷ்யாவில் சுவீடிஷ்காரர் குடியேறி உருவாக்கிய பகுதிகள்தான் இன்று செழிப்பாக உள்ளன.

15-ஆம் நூற்றுண்டில் சுவீடனும் டென்மார்க்கும் ஒரு குடையின்கீழ் ஆளப்பட்டன. குஸ்தாபஸ் அடால்பஸ் என்ற மன்னர் காலத்தில் ஐரோப்பாவின் பெரும்பகுதி சுவீடிஷ் ஆட்சியிலும் செல்வாக்கிலும் அடங்கியிருந்தது.

அதற்கு முன்னரே சுவீடன் சில நூற்றுண்டுகள் பேரரசாக விளங்கியிருக்கிறது. கி.பி. 862 முதல் 500 ஆண்டுகள் ரஷ்யாவில் சுவீடனின் ஆட்சி நடைபெற்றது. இன்பம் அனைத்தையும் அநுபவித்துவிட்டு ஓய்ந்து அடங்கி ஒடுங்கித் துறவறம் மேற்கொள்ளும் சிலரைப்போல, சுவீடன் இப்போது வெளிநாட்டுப் பூசல்களினின்றும் வல்லரசு அரசியலினின்றும் விலகித் தனித்து இயங்கி வருகிறது. பேரரசுகளாலேயே உலகப் போர்கள் உண்டாகின்றன என்ற உண்மையை உணர்ந்திருப்பதால் இந்த மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ரஷ்யாவும் ஜெர்மனியும் ஒன்றுக் கொன்று பகையான நாடுகள். அவற்றுக்கு அண்மையில் இருந்தும்,




சுவீடனும் ஏனைய
ஸ்காண்டினேவிய, பால்டிக் நாடுகளும்

போர் தம் நாட்டுக்குப் பரவாமல் சுவீடிஷ் மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொண்டனர். நடுநிலையாக இருந்தனர். இதனால், சுவீடனில் அமைதி நிலவிற்று, இந்த அமைதியே சுவீடன் அடைந்துள்ள பொருளாதாரச் செழிப்புக்கு அடிப்படை.

ஏனைய ஸ்காண்டினேவிய நாடுகளும் பால்டிக் நாடுகளும்* போரில் ஈடுபட்டுப் பலவாறு நஷ்டமடைந்தன; அவைகளினின்றும் மாறுபட்டு, சுவீடன் சேதத்தைத் தவிர்த்தது; செல்வத்தைப் பெருக்கியது.

## 3. தட்ப வெப்பநிலை

சுவீடனில் மழை மிகுதியாகவே பெய்கிறது. எப்போதாவது தேவையான அளவைவிட மழை குறைவாகப் பெய்தால் அக்காலங்களில் வேளாண்மைத் தொழிலுக்கு மின்சார ஆற்றலைப் பயன்படுத்துகின்றனர்.


உலகிலேயே வடக்கே உள்ள நாடு சுவீடன். அதனால், இங்கு பருவநிலை, வியப்பாக இருக்கிறது. மே மாதம் தொடங்கி மூன்று மாதங்கள் இளவேனிற் காலமாக இருக்கும். இக்காலத்தில் சுவீடனில் சூரியன் அல்லும் பகலும் ஒளி வீசுகிறது. அதாவது மே மாதத்தில் தோன்றும் சூரியன் ஜூலை மாதத்தில்தான் மறைகிறது. இதனால் சுவீடனுக்கு **நள்ளிரவுச் சூரியன் நாடு** என்ற பெயர் வழங்குகிறது. ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 30-ஆம் நாள் இரவில் சுவீடிஷ் மக்கள் சொக்கப்பனை

---

*ஸ்காண்டினேவிய நாடுகள் என்பன டென்மார்க், சுவீடன், நார்வே, பின்லந்து, ஐஸ்லந்து ஆகியவை.

பால்டிக் நாடுகள் என்பன பால்டிக் கடலைச்சுற்றியுள்ள நாடுகள். அவையாவன—சுவீடன், பின்லந்து, எஸ்டோனியா, லட்வியா, லிதுவேனியா.

கொளுத்தி, நள்ளிரவுச் சூரியனுக்கு நல்வரவு கூறி, மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றனர். ஆயுதபூசை விழாக் கொண்டாடும்போது நம் நாட்டில் நாம் செய்வதுபோல அவர்கள் அன்று வீடுகளையும் வாகனங்களையும் அழகு படுத்துவர் ; ஊரெங்கும் 'ஆடலும் பாடலும், அறுசுவை விருந்தும் பலவகைக் குடி'யும் நடக்கும். அன்று யாரும் எதையும் செய்யலாம். கேள்வி கேட்பார் இல்லை. கண்ணிருந்தும் பாராதவராகவும் காதிருந்தும் கேளாதவராகவும் இருக்க வேண்டுமென்பது போலிசாருக்கு அரசியலாரின் ஆணை. 1957-இல் நமது தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு சுவீடனுக்குச் செல்ல இசைந்தார் ;



நள்ளிரவுச் சூரியன் ஒளி வீசுகிறது ; படகில் செல்லும் மக்கள் அதைக் கண்டு இன்புறுகின்றனர்,

அப்போது சுவீடிஷ் அரசியலார் அவர் எப்ரல் 30-இல் அந்நாட்டுக்கு வந்து இந்த விழாவைக் காண வேண்டுமென்று விரும்பினர் ; அவரும் அவ்வாறே சென்றார்.

சுவீடன் அதன் அமைப்பால் சூரியனைப்பற்றியும் நிலவின் ஒளியைப்பற்றியும் ஆராய்வதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது. நிலவின் ஒளிபற்றி ஆராய்தற்குரிய "கிருணு ஜியோபிசிகல் இன்ஸ்டிட்டியூட்" என்ற நிறுவனத்தை ரஷ்ய விஞ்ஞானிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் சுவீடனில் மூடுபனிக் காலமாக இருக்கும். அப்போது உறைந்த பனிக்கட்டியில் ஓடி விளையாடி இந்நாட்டு மக்கள் இன்பமாகப் பொழுது போக்குவர்.

## 4. மக்களின் குணங்கள்

சுவீடிஷ் மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள் எவ்வேலையையும் முகமலர்ச்சியோடும் திறமையோடும் செய்யும் இயல்புடையவர்கள். நகைச்சுவை நிரம்பியவர்கள். மிக உயரமானவர்கள்.

சுவீடிஷ் மக்களுடைய நாட்டுவிளையாட்டு : கால் பந்தாட்டம் ; நாட்டு ஊர்தி: 'சைக்கிள்'; நாட்டு உணவு: மீன். ஆகஸ்டு மாதத்தில் கிராப்டர் என்னும் ஒருவகை மீனை அவர்கள் விரும்பி உண்பர். பிற மீன்களை உண்பது போல, கத்தியும் குத்து முள்ளும் வைத்துச் சாப்பிட்டால் இது சுவையாக இராதாம். ஆகையால் இதைக் கையால் தான் எடுத்து உண்பர். மீனுக்கு அடுத்தபடியாக, பால் சேர்க்காத கறுப்பு நிறக் காப்பியை இவர்கள் மிகவும் விரும்பிக் குடிப்பர். இந்தியக் காப்பி உலகெங்கும் புகழ் பெற்றது; காப்பிப் பிரியர்களான சுவீடிஷ் மக்கள், இந்தியாவிலிருந்து காப்பிக்கொட்டை வரவழைக்கின்றனர்.

ஆனால், காப்பியைச் சரியானபடி வடிகட்டித் தயாரிக்க அவர்களுக்கு நன்ருகத் தெரியவில்லை. அந்நாட்டில், பெண்கள் பலர் காப்பி தயாரிப்பதுபற்றி என்னை வினவினர்; நான் அதற்கு மறுமொழியாக எதையோ சாமர்த்தியமாகச் சொல்லி மழுப்பிவிட்டேன்.

சுவீடிஷ்காரர்கள் தங்கள் சைக்கிள்களைப் பூட்டி வைப்பதில்லை; இரவிலும் அவரவர் வீட்டுக்கு முன்பாகத் தெருவிலேயே விட்டுவிடுவர். இவ்வாறிருந்தும், ஒரு சைக்கிள்கூடத் திருட்டுப் போவதில்லை.

சுவீடிஷ்காரருக்கு மிக விருப்பமானவை:—உறைந்த பனிக்கட்டியில் ஓடி விளையாடுதல், படகோட்டுதல், காரமான புகையிலை, நள்ளிரவுச் சூரியன், அதிகாலையில் எழுந்திருத்தல், மாநிறம் முதலியனவாம்.

தந்தை புகழ் பெற்றவராயிருந்தால், மகன் தன் பெயரை விட்டுவிட்டுத் தந்தையின் பெயருக்குப் பின் 'மகன்' என்ற சொல்லைச் சேர்த்துக்கொள்வது சுவீடிஷ் மக்களிடம் நான் கண்ட ஒரு பழக்கம். சான்று: ஹான்சன், ஸ்கான்சன், கார்ல்ஸ்சன், எரிக்சன்.

பொதுவாக, சுவீடிஷ்காரர்களுக்கு 'கணக்கு' அவ்வளவு வராது! இத்தனைக்கும், பல ஆண்டுகளாக அவர்களுடைய நீட்டல் அளவு, முகத்தல் அளவு, நிறுத்தல்அளவு, நாணயம் எல்லாம் தசாம்ச முறையிலேயே இருக்கின்றன. ஆகையால், வாய்பாடு படிக்கும் வேலை இல்லை. சிறிய கூட்டல், கழித்தல் கணக்குகள் மட்டும் தான் அவர்கள் போடவேண்டியதிருக்கிறது. இதற்கு உதவியாக, 'கணக்குப் போடும் இயந்திரம்' வைத்திருக்கின்றனர். நம் நாட்டில் பலசரக்குக் கடைகள் சிலவற்றில்

சிலேட்டில் எழுதிப் பார்த்துக் கணக்குப் போட்டுச் சொல்லுவர். இதுபோல, சுவீடனில் எங்கு பார்த்தாலும் இந்த இயந்திரங்கள் பல்கிப் பெருகியுள்ளன. இவ்வகைக் கருவிகளைப் பிற நாடுகளுக்கு விற்பது சுவீடனின் முக்கிய தொழில்களுள் ஒன்ருக இருந்து வருகிறது.

பொருளாதார நிபுணர் பலர் சுவீடனில் இருக்கிருர்கள். சுவீடனின் ஏற்றுமதிகள் காகிதம், தளவாடச் சாமான்கள், பீங்கான், பொருளாதார நிபுணர்கள் என்று சொல்லுவது வழக்கம்.

'ஸ்டாம்பு' விற்பதற்கு இயந்திரங்கள் உள்ளன. அவற்றில் பணத்தைப் போட்டு எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்! தொழிலாளரின் சம்பளம் கூடுதலாக இருப்பதால், இவ்வாறு இயன்ற அளவு இயந்திரங்களைப் பயன்படுத்துகிருர்கள். வேலைக்காரப் பெண் வைத்துக் கொண்டால், அவளுக்கு மாதம் 300 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும். அது மட்டுமா? அவளுக்கெனத் தனியே ஓர் அறை ஒதுக்கவேண்டும், அங்கு ஒரு வானொலிப் பெட்டி வைத்துக் கொடுக்கவேண்டும். ஏதாவது ஒரு கிழமையில், மாலைப் பொழுது விடுமுறையும், ஓராண்டுக்கு மூன்று வார ஓய்வும், இந்த ஓய்வு காலத்துக்குச் சம்பளமும், சாப்பாட்டுச் செலவுக்குப் பணமும் கொடுத்தாக வேண்டும். தங்கள் வீடுகளில் வேலைக்காரர்களை வைத்துக்கொள்ள முடியவில்லை என்று காகித ஆலை முதலாளிகளாக இருப்பவர் இருவர் என்னிடம் கூறினர். "மின்சார ஸ்டவ், வீடு கூட்டும் மின்சாரக் கருவி, சலவை செய்யும் இயந்திரம், ரொட்டி சுடும் இயந்திரம், உணவுப் பொருள்களைக் கலக்கும் இயந்திரம் ஆகியன இருப்பதால் அதிகத் தொல்லையின்றி என் மனைவியே வீட்டு வேலைகளைச் செய்து விடுகிருள். தோட்ட

வேலையை நானே பார்த்துக் கொள்ளுகிறேன். தெருவிலிருந்து எங்கள் வீட்டுக்கு உள்ளே வரும் வழி நெடுகச் சில மாதங்கள் பனியால் மூடியிருக்கும். நான் பார்க்கும் வேலைகளில் அதைச் சுத்தம் செய்வதுதான் சற்றுக் கடினமானது" என்று அவருள் ஒருவர் என்னிடம் கூறினர்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒன்றரை கெஜம் அகலமும் மூன்று கெஜ உயரமும் உள்ள கண்ணுடிச் சன்னல் வைத்திருப்பார்கள். அதற்கு வெளிப் புறத்தில் பளிங்குக்கல் போட்டு அதன்மீது 30, 40 செடித் தொட்டிகள் வைத்திருப்பர்.

மலைகளிலுள்ள ஏரிகளுக்குச் சென்று பிறந்த மேனியாகக் குளிப்பது சுவீடனில் வழக்கம். ஏரிகளில் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் தனித்தனிப் பகுதிகள் உண்டு.

சுவீடனின் 75 லட்சம் மக்களில், (1960-இல்) 30,000 பேர் பின்லந்து நாட்டிலிருந்து வந்தவர்; 10,000 பேர் 'லாப்ஸ்' என்னும் இனத்தவர்; குறிஞ்சி நிலத்தில் வாழ்பவர். ஏனையோர் அனைவரும் ஓர் இனத்தவர். ஆகையால், சிறுபான்மையோர் பிரச்சினையோ, பிரிவினை மனப்பான்மையோ சுவீடனில் இல்லை. போர்க்காலத்தில் அண்டை நாடுகளிலிருந்து $2\frac{1}{2}$ லட்சம் பேர் சுவீடனுக்கு வந்து தஞ்சம் அடைந்தனர்; போர் முடிந்த பிறகும் அவர்கள் சுவீடனிலேயே தங்கித் தாங்களும் அந்த இனத்தவராகி விட்டனர். அமைதியான வாழ்வைக் கண்டவர் அகலுவரா?

சுவீடனில் வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் பெண்களுக்கு ஆடவரோடு சம உரிமை உண்டு. தலைமயிர் வெட்டும் வேலையில் பெரும்பாலும் பெண்களே உள்ளனர். மருத்துவம், ஆசிரியத் தொழில்களிலும் பல்லாயிரம்

பெண்கள் இருக்கின்றனர். இந்தியாவில் இருக்கும் சுவீடிஷ் தூதுவர் ஒரு பெண்மணியே.*

சுவீடிஷ் மக்கள் எல்லோரும் பிராடஸ்டண்டு மதத்தினர்; இவர்கள் இறைப்பற்று மிக்கவர்கள்; ஐரோப்பாவிலேயே அழகான மாதாகோயில்களை இவர்கள் கட்டியுள்ளனர். தம் சமயத்தைப் பரப்ப இவர்கள் ' சர்ச் ஆவ் சுவீடிஷ் மிஷன் ' நிறுவியுள்ளனர்; இதன் முழுப் பெயர் லூத்தரன் கிறித்தவத் திருச்சபை என்பது. இதன் கிளையான தமிழ்நாட்டு லூத்தரன் கிறித்தவத் திருச்சபை தரங்கம்பாடி, புதுக்கோட்டை, திருப்பத்தூர் (இராமநாதபுர மாவட்டம்), திருச்சி முதலிய பல இடங்களில் கல்விப் பணியும், மருத்துவப் பணியும் செய்து வருகிறது.

சுவீடனில் ஒருவன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளு முன், பனிக்காலத்தில் உறைந்த பனியில் அவளுடன் ஓடி விளையாட வேண்டும்; வேனிற்காலத்தில் அவளுடன் நீந்தி விளையாட வேண்டும். அதன் பின்னரே ஒரு வேளை அந்த உறவு திருமணமாக முடிவடைவது வழக்கம். எனவே, "விடிந்தால் கல்யாணம்; பிடி வெற்றிலை பாக்கு " என்பது அங்கே கிடையாது.

சுவீடனில் ஆடவர் தொகை குறைவு; ஸ்டாக்ஹோம் நகரப் பூங்காக்களில் ஆடவர் தேடும் பெண்களையும், கூச்சப்படும் காதலன் கழுத்தில் கை போட வலிய முன் வரும் துணிச்சலுள்ள மங்கையரையும் காணலாம். சட்ட விரோதமாகக் குழந்தை பிறந்தது என்று சொல்லிப் பெண்களைத் தண்டிக்கும் வழக்கம் சுவீடனில் இல்லை. கணவன் முன்னிலையில் சுவீடிஷ் பெண்டிர் எந்த ஆணுடனும் நடனம் ஆடலாம்; இதைப்பற்றி யாரும் தவறாகக் கருதுவ

---

* 1960-இல் தூதுவராக இருப்பவர், மே. த. திருவாட்டி ஆல்வா மிர்டால்.

தில்லை; மனைவியைச் சந்தேகிப்பதும் இல்லை. கணவருக்கு ஒரு பட்டம் இருந்தால் அதற்கேற்பத் தாமும் பட்டம் அல்லது பதவிப் பெயர் போட்டுக் கொள்ளும் உரிமை சுவீடனில் பெண்களுக்கு இருந்து வருகிறது. சான்று:

| கணவனின் பட்டம் | மனைவியின் பட்டம் |
| --- | --- |
| அட்மிரல் | அமிராலன்னன் |
| பிஷப் | பிஷப்பின்னன் |
| கான்சல் | கான்சல்லின்னன் |

விருந்து வைப்பதில் சுவீடிஷ்காரர்க்கு ஆவல் மிகுதி. ஓராண்டில் மூன்று பெரிய விருந்தாயினும் படைப்பவர்க்குத்தான் சமுதாயத்தில் மதிப்பும் நல்ல பெயரும் உண்டு.

ஒவ்வொரு வேளையும் சாப்பாடு முடிந்ததும், குழந்தைகள் தங்கள் பெற்றோருக்கு முன்பாக நின்று அவர்களை வணங்கி நன்றிகூறுவது வழக்கம்.

குழந்தைகளுக்கு அடுத்தபடி சுவீடிஷ்காரர்களுக்கு நாய்கள்மீது விருப்பம் மிகுதி. பெரிய கடைகளில், அங்கு பொருள்கள் வாங்க வருபவர்களின் நாய்களைச் சிறிது நேரத்துக்குப் பார்த்துக்கொள்ள, '**நாய்ப் பண்ணை**' வைத்து நாய் காவலரும் நியமித்திருக்கின்றனர்.

## 5. லாப் மக்கள்

"லாப்ஸ்" என்று குறிப்பிடப்படும் மக்கள் உலகில் 32,000 பேர் இருக்கின்றனர். இவர்களில் 10,000 பேர் சுவீடனிலும் ஏனையோர் நார்வேயிலும் பின்லந்திலும் இருக்கிறார்கள். இந்த நாடுகளில், ஆர்க்டிக் கடலையொட்டிய பகுதிகளிலே இவர்கள் வாழ்கின்றனர்,

சுவீடனில் இவர்களுடைய குடியிருப்புக்கள் உள்ள இடங்கள், ஸ்டாக்ஹோம் நகருக்கு ஓராயிரம் மைல் வடக்கே உள்ளன.

வெள்ளைக்காரர்கள் குடியேறியுள்ள நாடுகளிலெல்லாம் அதற்கு முன்னரே சில மக்கள் வாழ்ந்தனர். ஆஸ்திரேலியாவில் "அபாரிஜின்ஸ்" என்று குறிப்பிடப்படுபவர்களும் கனடாவிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் செவ்விந்தியர் (அல்லது சிவப்பு இந்தியர்) என்று வெள்ளைக்காரரால் பெயர் வைக்கப்பெற்றிருக்கும் பொனீசியரும், ஆப்பிரிக்காவில் மலே சாதியினரான சில பழங்குடிமக்களும் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்களே அந்த நாடுகளுக்கு உரியவர்கள்.

இப் பழங்குடி மக்கள் அனைவர்க்கும் பொதுத் தன்மைகள் பல உண்டு. கூடாரங்களில் வாழ்தல், இயற்கையை வழிபடுதல், துர்தேவதைகளை நம்புதல், விவசாய வாழ்வில் ஈபடுதல் ஆகிய ஒப்புமைகள் காணப்படுகின்றன. வலுவிலும் நாகரிகத்திலும் தங்களைவிடச் சிறந்த வெள்ளையர்கள் வந்ததை இப் பழங்குடியினர் விரும்பவில்லை. அதைத் தடுக்க அவர்களுக்கு ஆற்றலும் இல்லை. வெள்ளையர்கள் பெருந்தொகையாகக் கப்பல் கப்பலாக வந்து இறங்கியதால், அவர்களைக்கண்டு அஞ்சி, இப் பழங்குடியினர் ஒதுங்கி, மக்கள் கூட்டம் இல்லாத பகுதிகளுக்கு — பெரும்பாலும் காடுகளுக்கு — சென்று அங்கேயே தங்கினர். இவர்களுடைய சூதுவாதற்ற பண்பை அறிந்த வெள்ளைக்காரர்கள், காட்டை அழித்து நிலத்தைப் பண்படுத்த இந்த மக்களைப் பயன்படுத்திக் கொண்டனர். காட்டை அழிக்க, கொடிய உயிரினங்களைப் பிடிக்க வேண்டும்; அவ்வகையிலும் இவர்களே தக்க அனுபவம் பெற்றிருந்தனர்.

எல்லா நாடுகளிலும் இத்தகைய மக்கள் தொகை குன்றிவருகிறது. நம் நாட்டிலும் கூட, திராவிட மொழிகளின் கிளை மொழிகளைப் பேசி மலைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் இனத்தவரான தோதவர், படகர், குறும்பர், மலையாளி ஆகிய மக்களின் தொகை சுருங்கிக் கொண்டே போகிறது. எஞ்சிய மக்களாவது வாழ்ந்து காட்சிப்பொருளாக இருக்கவேண்டுமென்று அரசியலார் விரும்புவதும், அவர்களைப்பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்யப் பல்கலைக் கழகங்கள் முயலுவதும் உலகெங்கும் வழக்கமாக இருந்துவருகிறது.

சுவீடனில் இத்தகைய இனம் லாப்ஸ். ஸ்காண்டிநேவிய நாடுகளில் முதலில் குடியேறியவர்கள் இவர்களே. மீன் பிடித்தும், மான் வேட்டையாடியும், காடுகளிலும் பண்ணைகளிலும் வேலை செய்தும் இவர்களின் அன்றாட வாழ்க்கை நடந்து வருகிறது.

இவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று, பாதிரி மார்கள் இவர்களுடன் குடிசைகளில் வாழ்ந்து இவர்கள் அனைவரையும் கிறித்தவராக்கிவிட்டனர். இவர்களுக்கென தனியே பள்ளிக்கூடங்களும் நடத்தி வருகின்றனர்.

இவர்கள் பேசும் மொழி, "லாப்" என்பது. இதில் 50 கிளை மொழிகள் உண்டு.

இவர்களுடைய வாழ்க்கையைப் பின்னணியாக வைத்துப் பல நாவல்கள் வெளிவந்துள்ளன.

# 6. வாழ்க்கை வசதிகள்

சுவீடனில் சுகாதாரம் நல்ல முறையில் இருக்கிறது. இக்காலத்தில் உலகின் பெரும்பாலான நாடுகளில் சுகாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் தம் உடல் நலத்தைப் போற்றுவதிலும், அரசியலார் தம் நாட்டில் நோய்கள் பரவுவதைத் தடுப்பதிலும், வந்த நோயைக் குணப்படுத்துவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனர். இந்த முறைகளில் பல நாடுகளுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் இருந்த பெருமை சுவீடனுக்கு உண்டு.

சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும்; அதுபோல உடம்பை உறுதியாக வைத்துக்கொண்டுதான் செயற்கரிய செயல்களில் ஈடுபட இயலும். சுவீடனில் உடற்பயிற்சிக்கு அளவு கடந்த முக்கியத்துவம் உண்டு. 10,000 க்கு மேற்பட்ட உடற்பயிற்சிக் கூடங்கள் இங்கே இருக்கின்றன. இதன் விளைவாகச் சுவீடிஷ் மக்கள் நல்ல உடலமைப்பு உடையவராக இருக்கின்றனர். அவர்களுடைய சராசரி உயரம் 5 அடி 9 அங்குலம்; 'தென்னை மரம்போல வளர்ந்திருக்கிறாயே?' என்று நாம் சொல்லுவது போல, 'சுவிடிஷ்காரன் மாதிரி வளர்ந்திருக்கிறாயே' என்று கேட்பது ஐரோப்பாவில் மரபு.

அவர்களுடைய சராசரி வயது 70. (நம் நாட்டில் 27 வயதாக இருந்தது; சுதந்தரம் பெற்றபின் அரசியலார் மேற்கொண்ட பெரு முயற்சிகளின் விளைவாக இது 35 ஆக உயர்ந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.)

சிறந்த மருத்துவர்களும் மருத்துவமனைகளும் நிறைந்திருப்பதால் சுவீடனில் சுகாதாரம் சிறப்பாக நிலவுகிறது. மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் பல புதிய

கருவிகளும் சுவீடனில் செய்யப்படுகின்றன. சுவீடனின் மிகப்பெரிய பல்கலைக்கழகம் உப்சாலாவில் இருக்கிறது. அப் பல்கலைக் கழகத்தில் மருத்துவத் துறையில் மிகச் சிறந்த கல்வி அளிக்கப்படுகிறது.

வெளிநாட்டு ஆகாய விமானங்கள் சுவீடன்மீது குண்டுமாரி பொழிந்தால், அப்போது நோயாளிகளை ஆபத்தினின்றும் காப்பாற்றுவதற்காக மலைகளுக்குள் தங்குமிடங்களும் மலைகள் மீது மருத்துவ நிலையங் களும் கட்டியிருக்கிறார்கள். குண்டுவீச்சு எச்சரிக்கை கொடுக்கப்பட்டதும், நோயாளிகளை மருத்துவ நிலையங்களி லிருந்து தங்குமிடங்களுக்குக் கொண்டுசெல்ல ஆங்காங்கு ‘லிப்ட்’ என்னும் (மின்சாரத்தால் இயங்கும்) ஆள் அனுப்பும் கருவியை வைத்திருக்கிறார்கள்.

ஹெர்பர்ட் ஒலிவகுரோனா என்பவர் நரம்பு வைத்தி யத்திலும், கிளாரன்சு கிராபூர்ட் என்பவர் இருதய அறுவை மருத்துவத்திலும் உலகப் புகழ் பெற்றிருக் கிறார்கள்.

தூய்மையாக இருப்பது சுவீடனில் பாமர மக்க ளிடமும் பழக்கமாக இருக்கிறது. தொழிலாளர்களின் உடுப்பு மடிப்புக் கலைவதில்லை; அவர்களுடைய பூட்சில் பளபளப்புக் குறைவதில்லை.

சவரம் செய்து முடித்த ‘பிளேடு’களைப் போடுவதற் கென உணவு விடுதிகளில் தனியே தொட்டிகள் வைக்கப் பெற்றிருக்கின்றன.

சுவீடிஷ் மக்கள் அவரவர் வருவாய்க்கு ஏற்ப ஆண்டு தோறும் ஒரு சிறு தொகையை உடல்நலப் பாதுகாப்பு இன்சூரன்சுப்பணமாக அரசியலாருக்குக் கட்டுகின்றனர். இவ்வாறு கிடைக்கும் தொகை போக எஞ்சிய பெருந்

தொகை அரசியலாரால் செலவிடபபடுகிறது. நோயுற்றிருக்கும்போது, சுவீடிஷ்காரர் செலவிடும் தொகை மிகச் சொற்பமே. நம் நாட்டில் அப்போதுதான் செலவு அதிகமாக இருக்கும் !

குழந்தைகளை வளர்ப்பதற்காக 16 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் ஓராண்டுக்கு 400 ரூபாய்வீதம் குழந்தையின் தாயாருக்குச் சுவீடிஷ் அரசியலார் பொருளுதவி செய்கின்றனர். தொழிலாளர் அனைவர்க்கும் ஓராண்டுக்கு மூன்று வாரம் சம்பளத்துடன் கட்டாய ஓய்வு உண்டு.

காற்றோட்டமும் வாழ்க்கை வசதிகளும் நிறைந்த வீடுகளைக் கட்டிக்கொள்ள உதவியாகக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கும் ஏற்பாடுகளையும் சுவீடிஷ் அரசியலார் செய்திருக்கிறார்கள். இத்தகையசெலவுக்காக சுவீடிஷ்அரசியலார் தங்களுடைய வருவாயில் (ரூ. 600 கோடி) நான்கில் ஒருபங்கை அதாவது 150 கோடி ரூபாயை ஆண்டுதோறும் செலவிட்டு வருகின்றனர். இவ்வளவு பணம் செலவுசெய்ய சுவீடிஷ் அரசியலாரின் வருவாய் இடம் தருகிறது. மக்கள் தலைக்குச் சராசரி 800 ரூபாய் வீதம் சுவீடிஷ் அரசியலார்க்கு வரி கொடுக்கின்றனர் ; தமிழ் நாட்டிலுள்ள நாம் மாநில இந்திய அரசியலார்களுக்கும் நகரசபைகளுக்கும் கொடுக்கும் மொத்த வரியைக் கணக்கிட்டால் அது தலைக்கு, சராசரி அறுபது ரூபாய் ஆகும். ஆகையால் சுவீடனை நாம் பின்பற்ற இயலாது. பார்ப்பதற்கு மட்டும் பயன்படும் நாடு அது.

மூன்றாவது குழந்தைக்குப் பின்னும் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் அரசியலார் மாதந்தோறும் பெரும்பொருளை குழந்தை வளர்ப்புச் செலவுக்காகக்

கொடுக்கின்றனர். குருடர்களுக்கும் உறுப்புக்களில் பிற குறைபாடு உள்ளவர்களுக்கும் ஓய்வுச் சம்பளம் உண்டு. காணுமிடமெல்லாம் குழந்தைநல மாளிகைகள் காட்சி தருகின்றன; பிள்ளை பெற்றெடுத்ததும் சிலவாரம் ஓய்வாக இருக்கத் தாய்மார்களுக்கு நல்வாழ்விடங்கள் கட்டப்பட்டுள்ளன; பூங்காக்களில் குழந்தைகளை விளையாடச் செய்து அவர்களைக் கண்காணிக்க அரசியலார் ஆங்காங்கு தாதிகளை நியமித்துள்ளனர். இப்படி எத்தனையோ வசதிகள் உள்ளன, சுவீடனில். அவர்களுடைய பிரச்சினைகள் நம் நாட்டு நிலையினின்றும் மாறுபட்டவை. நம்மைப் பற்றிய வரை சுவீடன் ஒரு கனவு உலகமே.

## 7. நகரங்கள்

சுவீடனின் முக்கிய நகரங்கள் ஸ்டாக்ஹோம், கோதன்பர்க், மால்மோ, உப்சாலா என்பன.

### ஸ்டாக்ஹோம்

சுவீடனின் தலைநகரம் ஸ்டாக்ஹோம். 1960-இல் இங்கு 10 லட்சம் பேர் வாழ்கின்றனர். இது அழகான நகரம்; வரலாற்றுப் புகழ்பெற்ற ஊர். பதின்மூன்று ஏரிகளுக்கும் பல குன்றுகளுக்கும் இடையே அமைந்துள்ளது. குன்றுகளில் ஒன்றைவிட ஒன்று உயர்ந்த தளத்தில் வீடுகள் கட்டப்பட்டிருப்பதால், ஏரிக்கு அப்பாலிருந்து பார்க்கும்போது கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கும். எண்ணற்றமின்சார விளக்குகளின் ஒளி ஏரி நீரில்படும்போது, அது கவினுறு காட்சியாய் இலங்குகிறது. "இறந்துவிடுமுன் ஸ்டாக்ஹோம் நகரை இரவில் பார்த்துவிடு" என்பது ஒரு சுவீடிஷ் பழமொழி.

ஸ்டாக்ஹோம் நகரத்துப் பாலங்கள் பொறி இயல் கலையின் திறமைக்குச் சான்றாக உள்ளன. குடி தண்ணீர், ஏரி நீர், கடல் நீர் ஆகிய ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று கலந்து விடாதபடி இப்பாலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாலங்களிலும் கட்டிடங்களிலும், அவை கட்டப்பட்டபோது வேலையை மேற்பார்த்தவர்கள், அவற்றுக்கு மாதிரிப்படம் வரைந்தவர்கள் ஆகிய அறிஞர்களின் பெயர்கள் பொறிக்கப்படுகின்றன. இதனால், அந்த அலுவலர்க்குப் பொறுப்புணர்ச்சி ஏற்படுகிறது.

ஸ்டாக்ஹோம் நகரத்து ஏரிகளின் நடுவே ஒரு சிறு தீவில், இரவு நேரத்தில் உல்லாசமாகப் பொழுதுபோக்க நாள்தோறும் கலை நிகழ்ச்சிகளும் உடற்பயிற்சிகளும் நடைபெறுகின்றன. இங்கு நடைபெறும் நடனங்களில் கலந்து கொள்வதற்கு உரிய கட்டணத்திற்கு 75% வரி உண்டு. சுவீடிஷ் அரசியலார்க்குப் பெருவருவாய் தரும் இனங்களில் 'நடன வரி'யும் ஒன்று.

ஸ்டாக்ஹோமிலுள்ள உயிரினக்கூடம் ஒரு மலைமீது இருக்கிறது. திறந்த வெளியில் அமைந்திருப்பது இதன் சிறப்பு.

ஸ்டாக்ஹோமில் பல கட்டிடங்களில் பத்தாவது மாடியில் நிலா முற்றத்தில் குழந்தைகள் விளையாடுவதற்காகச் செயற்கைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தெருவில் குழந்தைகள் விளையாடுவதும், வாகனங்களில் சிக்குண்டு சின்னஞ்சிறு பாப்பாக்கள் அவதிப்படுவதும் அந்த மக்கள் அறியாதது.

ஸ்டாக்ஹோம் நகரில் சிற்பக் கலை சிறப்புப் பெற்றிருக்கிறது. இங்குள்ள நகர மண்டபம் கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. ஸ்டாக்ஹோமில் எங்கு

நோக்கினும் ஒரு சிலை இருக்கிறது. இவற்றுள் யான் விரும்பிப் போய்ப் பார்த்தது சுவீடிஷ் காரரான ஆல்பிரட் நோபெல் என்பவருடைய சிலையும், அதற்கருகேயுள்ள ஆல்பிரட் நோபெல் நினைவு நூலகமும்.

படகிலும், டிராமிலும், மோட்டார் காரிலும்—பகலிலும் மீண்டும் இரவிலும்—சுற்றிப் பார்த்தால்தான் இந் நகரின் முழு வடிவம் தெரியும்.

ஸ்டாக்ஹோமில் நகரெங்கும் கார்கள் பெருகியுள்ளன. கார் நிறுத்த இடமில்லாமல், சிலர் அதை ஓட்டிக்கொண்டே இருக்க நேரிடும். கூடுமானவரை, காரை வீட்டில் நிறுத்திவிட்டு, உள்ளூர் ரயிலிலோ அல்லது நடந்துவந்தோ, கடைகளில் பொருள்கள் வாங்குவது அந்நகர் மக்களின் வழக்கம்.

பெரிய கடைகளில் நாம் வாங்கிய பொருள் அனைத்தையும் கடைவாயிலில் கொண்டுவந்து தருவதற்கு ஆட்கள் இல்லை; சக்கரம் உள்ள 'தள்ளு வண்டிகள்' கடையில் இருக்கும். அவற்றில் ஒன்றை ஓட்டிக்கொண்டு, கடைக்குள் எல்லாப் பகுதிகளுக்கும் செல்லவேண்டும். ஆங்காங்கு நாம் வாங்கும் பொருள்களை அந்த வண்டியில் வைத்துக் கொள்வது வழக்கம். இந்த ஏற்பாடு உள்ள கடைகளுக்கு 'சூப்பர் மார்க்கட்' என்று பெயர்.

## கோதன்பர்க்

ஸ்டாக்ஹோம், சுவீடனின், கிழக்குக் கரையில் இருக்கிறது. கோதன்பர்க், மேற்குக் கரையில் உள்ள பெரிய துறைமுகம். இங்கிருந்துதான் மேற்கேயுள்ள நாடுகளுக்கும் ஆசியாவின் பெரும்பகுதிக்கும் சுவீடனின் பொருள்கள் செல்லுகின்றன.

கோதன்பர்கின் மக்கள் தொகை ஐந்து லட்சம். திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகராக இருப்பதால் இது பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது. உலகப் புகழ்பெற்ற எஸ். கே. எப். 'பால் பேரிங்' தொழிற்சாலை இந்நகர்க்குப் பெருமை தருகிறது.

**உப்சாலா**

இது ஒரு சிறு நகரம். ஆனல், செல்வர்களும் அறிஞர்களும் வாழும் தொன்மையான நகர். எனவே, திருமகளும் கலைமகளும் கூடிவாழும் ஊர். உப்சாலா ஊரினர் என்ருல் பண்பாட்டின் வழிவந்தவர் என்று பொருள்.

## 8. கல்வி

கல்வித் துறையிலும் சுவீடன் முன்னேறி இருக்கிறது. ஒன்பது ஆண்டுகள் கட்டாயக் கல்வி முறை சுவீடனில் நடைமுறையில் இருந்து வருகிறது. அவ்வாறு கற்க இயலாதவர்கள் எட்டு ஆண்டுகள் கற்ற பிறகு, வாரந் தோறும் இரண்டு நாட்கள் விகிதம் ஈராண்டுகள் கல்வி கற்க வேண்டும். இந்த 8 அல்லது 9 ஆண்டுக் காலத்திற்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட வேண்டுவதில்லை. அது போலவே, மாணவ மாணவியர் அனைவர்க்கும் சிற்றுண்டியும், ரொட்டி, சூப்பு, உருளைக்கிழங்கு, மீன், ஆப்பிள் ஆகியவற்றுடன் கூடிய பேருண்டியும் உடையும் அரசியலாரால் அன்பளிப்பாக வழங்கப்படுகின்றன. இவற்ருல், சுவீடனில் எல்லோருமே எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருக்கின்றனர்.

ஓராண்டில் 360 மைல் (580 கிலோ மீட்டர்) தொலைவு சுற்றுப்பயணம் செய்து மாணவர் ஒவ்வொருவரும் சுவீடன் நாட்டின் சில பகுதிகளையேனும் காணவேண்டும் என்ற ஏற்பாடு இருந்து வருகிறது. இந்தச் சுற்றுலாவுக் குரிய ரயில் பிரயாணத்துக்கு அரசியலார் சீட்டு வழங்கு கின்றனர்; பிற செலவுகளை மாணவரே செய்ய வேண்டும்.

கல்வி கற்கும் காலம் முழுவதும் சுவீடிஷ் மாணவர் தம் மொழியாகிய சுவீடிஷ் மொழியைப் பயிலுகின்றனர். விஞ்ஞானம் முதலிய எல்லாப் பாடங்களையும் கற்பதும், அம்மொழி வாயிலாகவே. உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்கும்போது ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ் ஆகியவற்றுள் இரண்டு மொழியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். எந்த மொழி என்பது மாணவரின் விருப்பத்துக்கு விடப் பட்டிருக்கிறது.

இந்த மொழிகள் எல்லாவற்றுக்கும் எழுத்து வடிவம் ஒன்றாக இருப்பதால் பல மொழிகளைப் பயிலுவது எளிதாக இருக்கிறது. ஆங்கிலம் தெரிந்த சுவீடிஷ்காரர் பல லட்சம் பேர் இருப்பதால், அவர்களுடன் எளிதில் நாம் பேசவும் பழகவும் இயலுகிறது. சமீப காலத்தில் ரஷ்ய மொழியைப் பல்லாயிரவர் பயின்று வருகின்றனர்.

ஸ்டாக்ஹோம் பல்கலைக் கழகத்தில் வாணிபக் கல்வியும் இசைக் கல்வியும் சிறப்பாகப் பயிற்றுவிக்கப் படுகின்றன.

உப்சாலாப் பல்கலைக் கழகத்தில் உலகப் பேரறிஞரெனக் கருதத் தக்க பலர் பேராசிரியராக உள்ளனர். பொருள்களின் உற்பத்தியிலும் விஞ்ஞான வளர்ச்சியிலும் இந்நாடு உயர்நிலையில் இருப்பதற்கு இப் பல்கலைக்

கழகத்தார் சுவீடிஷ் தொழிற்சாலைகளுக்குச் செய்யும் உதவியும் வழங்கும் அறிவுரையும் துணையாக உள்ளன.

மாணவர் எல்லோர்க்கும் கல்வியின் இறுதியில் ஒன்பது மாத காலத்துக்குக் கட்டாயமாகப் படைப் பயிற்சி உண்டு. இதுபோன்ற முறையைப் பின்பற்றி, மாணவரைச் சமுதாயப் பணிகளில் ஈடுபடுத்த இந்திய அரசியலார் திட்டமிட்டுள்ளனர். சுவீடிஷ் பல்கலைக் கழகங்களில் எந்தத் தேர்விலும் பென்சிலால் விடை எழுத மாணவர்க்கு உரிமை இருந்து வருகிறது.

## 9. நோபெல் பரிசு

இரசாயன அறிஞரான ஆல்பிரட் நோபெல் (1833-1896) என்ற சுவீடிஷ்காரர்தான் நோபெல் பரிசுகளை ஏற்படுத்தியவர். இவர் வெடிமருந்து செய்பவர் ஒருவரின் மகனாகத் தோன்றி, வேட்டுவைக்க உதவும் 'டைனமைட்'டைக் கண்டு பிடித்தார். இதனால், அளவு கடந்த பொருள் ஈட்டினார்; ஈட்டியதை ரஷ்ய எண்ணெய்க் கிணறுகளில் முதலீடு செய்தார்; அவருடைய பணம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிற்று; திருமணம் ஆகாததால் அவர் தம் பொருள் அனைத்தையும் ஒரு சேமிப்பு நிதியாக அமைத்து, நோபெல் பரிசுகள் வழங்கும் திட்டத்தை உயிலில் எழுதி வைத்தார். அதன்படி 1901 முதல் ஒவ்வோர் ஆண்டிலும் டிசம்பர் பத்தாம் நாளில் ஐந்து பரிசுகள் வழங்கப்படுகின்றன. உலக அமைதிக்கான பரிசு இன்னாருக்கு என்பதை நார்வே பாராளுமன்றம் முடிவு செய்கிறது. பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம் ஆகிய நான்கு துறைகளில் பரிசு வழங்கும் உரிமை அவ்வத்

துறைகளில் அறிஞர்கள் அடங்கிய சுவீடிஷ் மன்றங்களுக்கு உண்டு. கவியரசர் இரவீந்திரநாத தாகூர் 1913-ஆம் ஆண்டில் இலக்கியத்துக்கும் விஞ்ஞானி சர் சி. வி, இராமன் 1928-ஆம் ஆண்டில் பௌதிகத்துக்கும் நோபெல் பரிசுகள் பெற்றுள்ளனர்.

அந்தந்த ஆண்டில் கிடைக்கும் வருவாய், வட்டித் தொகைக்கேற்பப் பரிசுத் தொகை அமையும். 1959-இல் வழங்கிய பரிசு ஒவ்வொன்றும் இரண்டு லட்சம் ரூபாய்க்குச் சமமானது. 1913-இல் தாகூருக்கு ஒரு லட்சம் ரூபாய் தான் கிடைத்தது. சில ஆண்டுகளில் ஓரிரு பரிசுகள் வழங்கப்படாதிருந்தால், அந்தத் தொகையும் சேர்ந்து மூலதனமாகிவிடுகிறது. அதனுல் அடுத்த ஆண்டில் வட்டித் தொகை கூடுதலாக இருக்கும். சில ஆண்டுகளில், நோபெல் சேமிப்பு நிதிக்கு உரிய முதலீடுகளிலிருந்து எதிர் பாராத வருவாயும் இருக்கும். அந்த ஆண்டுகளில் பரிசு பெறுபவர்க்குக் கிடைக்கும் தொகை கூடுதலாக இருக்கும். சில ஆண்டுகளில் தொகையும் குறையும்; பரிசு இருவர்க்குப் பங்கிடப்படுவதும் உண்டு.

## 10. மொழி

சுவீடன் மக்களின் மொழி சுவீடிஷ். இது ஸ்காண்டிநேவிய மொழிகளுள் ஒன்று; தமிழ், திராவிட மொழிகளுள் ஒன்றுக இருப்பதுபோல. தமிழ் இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் பரவியிருப்பதுபோல, சுவீடிஷ் மொழி சுவீடனில் மட்டுமன்றிப் பின்லந்திலும் பெரும் பாலோர் பேசும் மொழியாக இருக்கிறது.

சுவீடிஷ் மொழி* 9-ஆம் நூற்றாண்டுக்கு முன் எப்படி இருந்தது என்பதைக் கல்வெட்டுக்களிலிருந்துதான் தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது. 15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் இம்மொழி ஓரளவு வளர்ச்சியடைந்திருக்கிறது. 16-ஆம் நூற்றாண்டில் சுவீடன் பற்றிய வரலாற்று நூல்கள் முதல் தடவையாக ஏற்பட்டன. பிராடஸ்டண்டு இயக்கம் தோன்றியதால் அதன் எதிரொலியாகச் சமய நூல்கள் சுவீடிஷ் மொழியில் வெளிவரத் தொடங்கின; உரைநடை வளர்ச்சிக்கு இதுவே அடிகோலிற்று.

கவிதைத் துறையில் உணர்ச்சிக் கவிஞர் (Lyric Poets) பலர் தோன்றி இலக்கிய உலகில் நிலைத்த இடம் பெற்றுள்ளனர். இன்றளவும் இத்தகைய கவிதைகள் வெளிவருகின்றன. நாவல் துறைதான் சுவீடிஷ் இலக்கியத்தின் கொழுந்து என்று கூறலாம். பண்ணை வாழ்க்கையை அடிப்படையாக வைத்துப் பல கதைகள் சித்திரிக்கப் பட்டுள்ளன. செல்மா லேகரலாய் அம்மையார் எழுதிய கெஸ்ட்டா பெர்லிங் சாகா என்ற நாவல் உலக இலக்கியத்தில் இடம் பெற்றிருக்கிறது. கிறித்தவ சமயம், குருட்டு நம்பிக்கைக்கும் நாத்திகத்துக்கும் உள்ள போராட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலும் நாவல்கள் வந்துள்ளன. ஸ்ட்ரிண்ட் பெர்க், லாகர் லெவ், வான் ஹைடன்ஸ்டாம், பேர் லாகர் குவிஸ்டு போன்றோர் மிகச் சிறந்த நாவல் ஆசிரியர்களென்று இலக்கிய மேதைகள் அனைவரும் கருதுகின்றனர்.

தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்குக்குச் சமமானவரே சுவீடிஷ் மொழி பேசுகின்றனர்.

---

*இதைப்பற்றி விரிவாக அறிய விரும்புவோர், கலைக்களஞ்சியம் தொகுதி 5-இல் 101-102-ஆம் பக்கங்களைப் படிக்கலாம்.

எனினும் சுவீடிஷ் மொழியில் ஆண்டு தோறும் 4,000 புதிய நூல்கள் (தமிழில் 1959-இல் 1,900 நூல்கள்) வெளிவருகின்றன.

## 11. விஞ்ஞான முன்னேற்றம்

விஞ்ஞானத் துறையில் வளர்ச்சி அடைந்துள்ள நாடு சுவீடன். தீக்குச்சியைக் கண்டுபிடித்து உலகுக்கு வழங்கியவர்கள் இந்நாட்டினரே. நம் நாட்டில் திருவொற்றியூரிலும் பம்பாயிலும் உள்ள 'வெட்டும் புலி' (Wimco) தீப்பெட்டித் தொழிற்சாலைகள் சுவீடிஷ்காரர்களால் தொடங்கப் பெற்றவையே.

ஐஸ்பெட்டி, சிக்கலைக் குறைக்கும் எஃகு ரவைகள் (Ball-bearings), டெலிபோன், டீசல் இயந்திரம், மண் எண்ணெய் அடுப்பு (Stove) ஆகியவையும் சுவீடிஷ்காரர் கண்டுபிடித்தவையே.

சுவீடிஷ் எஃகுதான் தரத்தில் சிறந்த எஃகு என்று உலகினர் ஒருமனத்தோடு கூறுகின்றனர். சுவீடனின் வட பகுதியில் இரும்புத்தாது அளவு கடந்து நிறைந்திருக்கிறது. அதை வெட்டி எடுக்கும் முயற்சியில் புதிய முறைகளைச் சுவீடிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஆண்டு தோறும் ஒன்றே முக்கால் கோடி டன் இரும்புத்தாது எடுக்கிறார்கள்; அதை எஃகு ஆக்குவதற்கு வேண்டிய நிலக்கரி சுவீடனில் இல்லாததால், இரும்புத்தாது, அண்டை நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அங்கே எஃகு ஆக ஆக்கப்படுகிறது.

கப்பலோட்டுபவர்களுக்குத் திசை காட்டும் கருவிகளும், பாலில் ஆடையைத் தனியே பிரிக்கும் இயந்திரங்

களும், சுவீடிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்தவையே. சுவீடனில் செய்யப்படும் மோட்டார் கார்கள் அமெரிக்காவுக்கு—இத் தொழிலில் பல்லாண்டுகளாக முன்னேறி கோடிக்கணக்கான கார்களை உற்பத்தி செய்துள்ள அமெரிக்காவுக்கு—அனுப்பப்படுகின்றன.

டைனமைட் கண்டுபிடித்தவர் நாம் முன்பே குறிப்பிட்ட ஆல்பிரட் நோபெல் என்பவரே. அது முதல் சுவீடன் விஞ்ஞானத்துறையில் பெருவளர்ச்சி அடைந்துள்ளது. தாவர நூல் வல்லாராக கார் லின்னேயியஸ் என்பவர் விளங்குகிறார். ஆண்டர்ஸ் செல்சியஸ் என்பவர் சென்டிகிரேடு தர்மாமீட்டரைக் கண்டு பிடித்திருக்கிறார்; பாரன்ஹீட் தர்மாமீட்டருக்குப் பதிலாக இதுவே இப்போது உலகெங்கும்—இந்தியாவிலும்—வெப்பத்தை அளக்க உபயோகப்படுத்தப்படுகிறது.

இரசாயனத்துறையில் C. W. ஸ்கிலீ என்பவர் ஏழு புதிய மூலக்கூறு (Elements) களைக் கண்டு பிடித்துள்ளனர். அணு ஆராய்ச்சியிலும் பௌதிகத்துறையிலும் புகழ் நாட்டியுள்ள மான் சீக்பாகன், இரசாயன அறிஞரான ஸ்வெட்கர்க் இருவரும் நோபெல் பரிசு பெற்றவரே; இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்க்கு வழிகாட்டியாக சுவீடனில் பணியாற்றி வருபவர்கள் என இப்பெருமக்களைக் குறிப்பிடலாம்.

உலகெங்கும் இப்போது வீடு பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. சிறிய வீடுகளை விரைந்து கட்டுவதற்கு வசதியாக சன்னல், சுவர், தளம் போன்ற வீட்டுப் பகுதிகளை அப்படியே விலைக்கு வாங்கிக் குறிப்பிட்ட இடத்தில் வைத்து ஒவ்வொன்றுக்கும் திருகு ஆணிபோட்டு முடுக்கிவிட்டு வீடுகட்டும் முறை பல நாடுகளில் பரவி வருகிறது.

இது சுவீடனில்தான் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வகை வீட்டுக்கு 'ப்ரீ-பாப்ரிகேட்டட் ஹவுஸ்' என்று பெயர்.

## 12. கூட்டுறவு

கூட்டுறவு இயக்கம் தொடங்கியது சுவீடனில் தான். அங்கு அது வெற்றி பெற்றதாலேயே, உலகெங்கும் கூட்டுறவுக் கொள்கைகள் பரவின. சுவீடனின் நடுநிலையான அரசியல் நிலைக்கும், பொருளியல் மேம்பாட்டுக்கும் அடிப்படை அந்த நாட்டின் கூட்டுறவு முறையே என்று கூறலாம். பல பெரிய தொழிற்சாலைகள் கூட்டுறவு முறையில் நடைபெறுகின்றன. சில்லறை வியாபாரத்தில் பெரும் பகுதி இந்த இயக்கத்தினருடைய 'கான்சம்' என்ற கடைகளால் நடத்தப்படுகின்றன. தொழிற் சாலைகளில் உணவு விடுதிகள் யாவும் கூட்டுறவு முறையிலேயே நிகழ்கின்றன. கூட்டுறவு ஏற்பாடு மூலம் பல்லாயிரம் வீடுகளைக் கட்டிக்குறைந்த வாடகைக்கு விடுவதும் முதல் தடவையாகச் சுவீடனில்தான் கையாளப் பெற்றது.

கூட்டுறவு இயக்கம் சுவீடனில் தோன்றிய வரலாறு குறிப்பிடத்தக்கது. 1880 அளவில் சுவீடனில் ரப்பர் விலை உயர்ந்தது; இது மக்களை மிகவும் வாட்டியது. பனி மிகுந்த சுவீடனில் ரப்பர்ச் செருப்பு இன்றி வெளியே செல்ல முடியாது. ஏற்றமும் இறக்கமும் நிறைந்த நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்வதால், ஒவ்வொருவரும் 'சைக்கிள்' வைத்திருக்கின்றனர். ரப்பர் விலை ஏற்றத்தால் ரப்பர்ச் செருப்பு விலை உயர்ந்தது; ரப்பர் டயர் டியூப் விலைகளும் ஏறின; 'சைக்கிள்' பயன் படுத்துவோர்க்கு வாழ்க்கைச் செலவு கூடுதலாயிற்று. வணிகர்

கட்டுப்பாடாக இருந்து விலை குறைய விடாமல் ஆவன செய்தனர். இந் நிலையில் காகிதத்தாலும் மரத்தாலும் செய்த செருப்புகளைக்கூட மக்கள் பயன்படுத்தி அல்லற் பட்டதால் அரசியலாரின் பொருளுதவியுடன் ரப்பர்த் தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட்டது ; விலை வாசியைக் குறைப்பதே நோக்கமாக அது ஏற்பட்டது ; தொழிலாளர்க்குப் பங்கு வைத்து நடத்தப்பட்டது. இதுவே கூட்டுறவு இயக்கத்தின் தொடக்க நிகழ்ச்சிகளுள் முக்கியமானது. படிப்படியாகப் பல துறைகளில் இது பெருகி ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி ஆழிசூழ் உலகெங்கும் பரவியிருக்கிறது.

## 13. தொழில்கள்

சிமிண்டு, இரும்பு, மரச்சாமான்கள், செயற்கை வீடுகள் ஆகிய இவற்றைச் செய்யும் தொழிற் சாலைகள், நெசவு ஆலைகள், சுரங்கங்கள் பலவகை இயந்திரங்களை உண்டாக்கும் தொழிற்சாலைகள் இந்த நாட்டில் சிறந்து விளங்குகின்றன. எனினும், சுவீடனுக்கே சிறப்பாக உரியவை காகித ஆலைகளும் பீங்கான் தொழிற்சாலைகளுமே.

சுவீடனில் 200 காகித ஆலைகள் இருக்கின்றன இவற்றில் சில ஆலைகள் பத்திரிகைக்காகிதமும் அட்டையும் உண்டாக்குகின்றன. போக்குவரவுக்கு வசதியாக இந்த ஆலைகள் யாவும் துறைமுகங்களை இணைக்கும் கால்வாய்களின் கரைகளில் இருப்பதையும் நான் கவனித்தேன். கால்வாய்ப் போக்குவரத்து மலிவாக இருப்பதால் அவர்கள் அதைப் பெருக்கியிருப்பதையும், நம் நாட்டில் ஏற்கனவே இருந்து வரும் கால்வாய்களும் தூர்ந்துவிடும்படி விடப்படுவதையும் நினைத்து வருந்தினேன்.

காடுகளை வெட்டி மரம் அறுக்கும் ஆலைகளுக்கு மரத்தை அனுப்பிப் பல பொருள்களைச் செய்கின்றனர். சில மரங்களை மரக்கூழாக ஆக்குகின்றனர். மரம் மலிவாக இருப்பதால், மரத்தாலேயே பல இடங்களில் சுவர் கட்டியிருக்கின்றனர். தச்சு வேலையிலும் சுவீடிஷ்காரர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

ஒரு நாட்டில் மிகுதியாயுள்ள பொருளிலிருந்து எல்லாப் பொருள்களையும் செய்தல் பல நாடுகளில் வழக்கம். (ஜப்பானில் மூங்கிலிலிருந்து மட்டும் 1400 வகையான பொருள்கள் செய்கின்றனராம்) இம்முறையை ஒட்டிச் சுவீடன் மக்களும் தங்கள் நாட்டில் மிகுதியாயுள்ள காகிதத்திலிருந்து செய்யாத பொருளே இல்லை எனலாம். காகிதப் போர்வைகள் கூடச் செய்கின்றனர். கரன்சி நோட்டு என்ற காகித நாணயத்தை உலகில் பரப்பியவர்களும் சுவீடிஷ் காரரே ஆவர். இதை இவர்கள் பரப்பியிராவிட்டால் வரவு செலவைச் சரிக்கட்ட இயலாமல் தவிக்கும் நிதி அமைச்சர்கள் எவ்வளவு இன்னல் அடைந்திருப்பர்!

கரன்சி நோட்டு வெளியிட்ட முதல் நாடு சீனு; ஆனுல், திட்டவட்டமான ஓர் உருவத்தைக் கரன்சி நோட்டுக்குக் கொடுத்து, வங்கிகள் வாயிலாக அச்சிட்டது சுவீடனில்தான். **'ஸ்டாக்ஹோம்ஸ் பாங்கோ'** என்ற சுவீடிஷ் வங்கி 1661 இல் நோட்டுக்களை அச்சிட்டு வழங்கியது; அளவு கடந்து அச்சிட்டதால் அல்லல் பல விளைந்தன. அதன் பிறகுதான் 1668 இல், வங்கி வெளியிடும் நோட்டின் அளவை அரசினர் வரையறை செய்வது, அதற்கென ரிசர்வு வங்கி ஒன்றை நிறுவுவது, அந்த வங்கிக்கு உரிமை வழங்குவது என்ற ஏற்பாடு சுவீடனில் அமலுக்கு வந்தது. இன்று உலகெங்கும் வழக்கிலுள்ள நாணய வெளியீட்டு முறை இதுவே.

# 14. பொருளாதாரச் செழிப்பு

நம் நாட்டு நாணயமாகிய ரூபாய் இங்கிலாந்தின் நாணயமான ஸ்டர்லிங்குடன் இணைக்கப்பட்டிருப்பது போல, சுவீடனின் நாணயமான குரோனர் (ஒரு குரோனர் என்பது ஏறத்தாழ நம் நாட்டு ஒரு ரூபாய்க்குச் சமமானது) அமெரிக்காவின் நாணயமான டாலருடன் இணைக்கப் பட்டிருக்கிறது. டாலர்பெரு மதிப்புள்ள அரிய நாணயமாக இருப்பதால், சுவீடிஷ் நாணயமும் வலுவான நிலையில் உளது. சுவீடிஷ் ஆசியலாரின் கடன் பத்திரங்களில் வெளி நாட்டார் பணம் போட்டு வைத்திருக்கிறார்கள். சுவீடிஷ்காரர்கள் பொதுவாகச் செல்வச் செழிப்புடையவர்கள். மற்ற ஸ்காந்திநேவிய நாடுகளிலுள்ள சொத்துக்களிலும் தொழில்களிலும் பெரும் பகுதி இவர்களைச் சேர்ந்தவையேயாகும். நிலக்கரி, பெட்ரோல், துணி, சிலவகை உலோகங்கள் ஆகியவற்றை மட்டும் வெளி நாடுகளிலிருந்து பெறுகின்றனர். பிற பொருள்களை எல்லாம் இவர்களே செய்து கொள்கின்றனர். வேலையின்மை என்பது சுவீடனில் கிடையாது. மக்களில் பாதிப் பேருக்குமேல் வங்கிகளில் கணக்கு வைத்திருக்கின்றனர்.

தொழிற்சாலையில் வேலை பார்க்கும் ஒவ்வொருவருக்கும் சராசரி வருவாய் ஓராண்டுக்கு ரூ 11,000.

இவ்வளவு அதிகமான சம்பளம் வாங்கியும் தொழிலாளர் மகிழ்ச்சியாக இருக்கவில்லை! உல்லாசமாய் வாழ, தங்களுக்குத் தேவையில்லாத விலை உயர்ந்த பொருள்களை பெருமைக்காக வாங்கி, தவணைகளில் கடனைக் கட்ட வேண்டிய நிலையில் இருந்து வருகின்றனர்.

கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் சுவீடனின் செழிப்பை வெள்ளிடை மலைபோல் தெரிவிக்கின்றன :—

வானொலி நிலையம்—33
வானொலிப் பெட்டி—25 லட்சம்
திரைப்பட மாளிகை—2242
டெலிபோன்—17 லட்சம் (ஏறத்தாழ ஒவ்வொரு வீட்டிலும் !)
ஆகாய விமான நிலையம்—30
மோட்டார்கார்—11 லட்சம் (ஏழு பேரில் ஒருவர்)
ரயில் பாதையின் நீளம்—10,400மைல் (16,740 கி. மீ.)
நாள் இதழ்—216

## 15. இருப்புப் பாதைகள்

சுவீடனில் ரயில் போக்குவரத்து நல்ல முறையில் இருக்கிறது. பெரும்பாலும் மின்சார ரயில்களே இயங்குகின்றன. பகல் பிரயாணத்துக்கும் இராப் பிரயாணத்துக்கும் தனித்தனி வண்டிகள் உள்ளன. இராப் பயணத்துக்கான வண்டிகளில் உறங்கும் வசதி உண்டு.

கோதன்பர்க் நகரிலிருந்து ஸ்டாக்ஹோம் நகர் 300 மைல் தொலைவிலிருக்கிறது. மின்சார ரயில் ஒன்றில் கோதன்பர்க்கிலிருந்து நான் புறப்பட்டு ஐந்து மணி நேரத்தில் ஸ்டாக்ஹோமுக்குப் போய்ச் சேர்ந்தேன். புகை பிடிப்பவர்க்கும் பிடியாதவர்க்கும் தனித்தனிப் பெட்டிகள் இருக்கின்றன. ரயிலில் ஒரு கோடியிலிருந்து பிறிதொரு கோடிக்கு ரயில் சென்றுகொண்டிருக்கும்போது நாமும் செல்லுவதற்கு இயலும். இத்தகைய 'வெஸ்டிபியூல்' ரயில் ஓரிரு இடங்களில் இந்தியாவிலும் இருந்து வருகிறது.

இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்க, சன்னல்களுக்கு அருகே, (நாம் எழுந்ததும்) தானே மடக்கிக் கொள்ளும் நாற்காலிகள் போடப்பட்டுள்ளன. ரயில் பாதை அருகே மக்கள் மலங்கழிக்கும் இந்திய நாகரிகம் சுவீடனுக்குப் பரவாததால், அந்நாட்டில் எப்போது வேண்டுமாயினும் சன்னல் வழியே எட்டிப் பார்க்கலாம்.

ஓடும் ரயிலிலேயே இன்றியமையாத எல்லாப் பொருள்களும் வணிகரால் விற்கப்படுகின்றன. குப்பைத் தொட்டிகளும் ரயிலில் வைக்கப்பட்டுள்ளன. குடிதண்ணீர்க் குழாய்கள் பொருத்தப்பட்ட நீர்தாங்கிகளும் காகிதத்தாலான குவளைகளும் (தொன்னை போன்றன) கைக்குட்டைகளும் அதற்கு அருகே வைக்கப்பட்டிருக்கின்றன. இதனுல், ஒருவர் எச்சல் செய்த பாத்திரத்தில் மற்றொருவர் குடிக்கும் நிலை தவிர்க்கப்படுகிறது.

மேல் வகுப்புப் பிரயாணிகளுக்கு ரயில் செல்லும் வழியின் படமும் அன்றைய காலைச் செய்தித்தாளும் விலையின்றி வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ரயிலிலும் கண்டக்டர் ஒருவர் இருப்பார்; இவர் குறிப்பிட்ட ரயில் அடுத்து எந்த ஊரில் நிற்கும் என்பதை ஒலி பரப்புங் கருவி வாயிலாக அறிவிக்கிருர்.

சுவீடனுக்கு 2000 கப்பல்கள் உள்ளன. இவற்றின் அளவு 30 லட்சம் டன்; இந்தியாவில் இரண்டாம் திட்டத்தின் இறுதியில் 9 லட்சம் டன் அளவுதான் கப்பல்கள் இருக்கும்.

சுவீடிஷ் ஆகாய விமானம் ஒன்றில் நான் பிரயாணம் செய்தபோது 'காகித சோப்' தந்தனர்; இந்தப் பக்கத்தின் அளவில் கால் பங்கு இருக்கும்; அதைத் தண்ணீரில் போட்டவுடன் 'சோப்'பின் நுரையும் நிறமும் மணமும் ஏற்பட்டு விடுகின்றன; சோப்பிலுள்ள இரசாயனப் பொருள்களைக் காகிதத்தில் தடவியுள்ளனர்.

# 16. பீங்கான் பொருள்கள்

சுவீடனின் சிறந்த தொழில்களுள் ஒன்று பீங்கான் பொருள்களைச் செய்வது. இத் தொழிற்சாலை ஒன்றினைக் காண ஓரிபர்சுக்குச் சென்றேன். ஏனைய தொழிற்சாலைகளைப்போலவே இதுவும் காண்பவர் மயங்கும் இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருந்தது. இத் தொழிற்சாலையை 'ப்ருக்' என்று குறிப்பிடுகின்றனர்.

'ப்ருக்' என்பது சுவீடிஷ் சொல். இதை மொழி பெயர்ப்பது எளிதன்று. பாலைவனத்தினூடே உள்ள சோலை வனம் போல, அடர்த்தியான காடுகளும் இரும்புத் தாது நிறைந்த மலைகளும் உள்ள பகுதிக்கு ஊடே உள்ள தொழில் நகரம் என்று இச்சொல்லுக்கு விளக்கம் கூற லாம். 'ப்ருக்' என்பது உற்பத்தி இயந்திரங்கள் உள்ள தொழிற்சாலை மட்டுமன்று; அதன் தொழிலாளர் தொடங்கி உரிமையாளர் உட்பட அனைவரும் தங்கள் குடும்பத்தோடு ஒருங்கே வாழ்ந்து, வேலை செய்து, ஆடியும் பாடியும் ஒரு தொகுப்பாக வாழும் சமுதாயம்.

சுவீடிஷ் தொழிற்சாலைகளின் மற்றொரு சிறப்பும் இங்கே தெரிந்தது. 67 வயது வந்த பிறகு நாட்டு மக்கள் எல்லோர்க்கும் அரசியலார் ஓய்வுச் சம்பளம் கொடுக்கிறார்கள்; அதனால் அதுவரை வாழவும் வேலை செய்யவும் சுவீடிஷ்காரர் விரும்புகின்றனர். 67 வயதுடைய ஒருவர் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும்போது, அங்கு அவருடைய மகன், பேரன் ஆகியோரும் வேலை பார்க்கின்றனர். மூன்று தலைமுறையினர் ஓரிடத்திலேயே வேலையில் இருப்பது இங்கு சாதாரண நிகழ்ச்சி.

---

* பீங்கான் என்ற சொல்லைச் சிலர் Ceramics என்ற பொருளில் வழங்கி வருகின்றனர்; Glass என்ற பொருள்படத்தான், நாம் இங்குக் கையாண்டிருக்கிறோம்.

பீங்கான் தொழிற்சாலையில் பீங்கான் பொருள்களை உருவாக்க எப்போதும் நெருப்பு எரிந்த வண்ணமாக இருக்கும். பார்ப்பதற்குக் கண் கூசும் அளவு தீப்பந்தத்தின் ஒளி கடுமையாகவும் சில சமயம் கொடுமையாகவும் இருக்கும். அளவு கடந்த ஆர்க்டிக் குளிரில் வாழும் சுவீடிஷ்காரர்களுக்கு இந்த நெருப்புச் சூடு சில மாதங்களுக்கு இன்றியமையாது தேவைப்படும். 'சுடச்சுட வரவேற்பு' என்ற சொற்றொடர் இதனால் ஏற்பட்டதே. தொழிற்சாலைத் தொடர்பு இல்லாதவர்களும் இந்த மாதங்களில் இங்கு வந்து நின்று குளிர் காய்ந்துகொள்ள, தொழிற்சாலைகள் இசைகின்றன. நம் நாட்டில் இப்படித் தொழிற்சாலைக்குள் அயலாரை உள்ளே விட்டால் என்ன ஆகும் என்பதை நான் கூற வேண்டுவதில்லை!

பிற நாடுகளில் செய்வதுபோல, பீங்கான் பொருள்களைச் சுவீடனில் பல்லாயிரக்கணக்கில் செய்வது கிடையாது. குறிப்பிட்ட அளவுதான் செய்கின்றனர். செய்வதைச் செம்மையாகச் செய்கின்றனர். இயந்திர உதவியுடன் பொருளைச் செய்து முடித்த பின்னர், அதற்கு மெருகு ஏற்றி அழகழகான படங்கள், பூக்கள் ஆகியவற்றை வண்ணங்களில் தீட்டுகிறார்கள். இதற்காக ஓவியர் பலர் இத் தொழிற்சாலையில் உள்ளனர். கவினுறு கலைப் பொருளாகத் தாம் உற்பத்தி செய்யும் பீங்கான் பொருள் அமைய வேண்டும் என்பதே அவர்களுடைய ஆசை.

> "நீ மென்மையான துணியை நெய்பவராக இருந்தால், அந்தத் துணியை உன் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்ற எழிலரசியின் உடலில் உடுத்தப் பயன்படுமாறு அவ்வளவு நன்றாகவும் திறமையாகவும் நெசவு வேலையைச் செய்;

> நீ பீங்கான் வேலை செய்பவனாக இருந்தால், நீ செய்யும் கோப்பை உன் அன்புக் காதலி அணைக்கும் கரங்களை அழகுபடுத்தும் கோப்பையாக அது அமையவேண்டும் என்ற எண்ணம் உன் மனத்தைவிட்டு அகலாதிருக்கட்டும்"

என்று அங்கே எழுதித் தொங்கவிட்டிருக்கிறார்கள். இந்த மேற்கோளை அடிக்கடி படித்துப் பார்த்துக் கொள்ளும் ஓவியர்கள் பிறந்த மேனியாகப் பெண்களின்



பீங்கானில் கலைஞனின் கைத்திறன்

படங்களைப் பீங்கானில் தீட்டுகிறார்கள், எண்ணற்ற வண்ணங்களில் மெல்லியலாரின் உடல் வளைவுகளின் கோணலும் நாணலும் உணர்வுடன் வெளிப்படுமாறு அப் படங்கள் உருவம் பெறுகின்றன; சுவீடிஷ் மன்னரும் அரசியலாரும் வெளிநாட்டினர்க்கு வழங்குவது இப்

பொருள்களையே. புகழ்பெற்ற இந்த ஓரிபர்சுப் பீங்கான்கள் பல நாடுகளின் பொருட்காட்சிச் சாலைகள், அரண்மனைகள், பெரிய கப்பல்கள் ஆகியவற்றில் அழகுப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் விலை ஒவ்வொன்றும் 100 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரை ஆகும்!

வெளிநாட்டுத் தூதுவர்கள் சுவீடனுக்கு நியமனமானதும் ஓரிபர்சுத் தொழிற்சாலைக்கு மனைவி மக்களுடன் சென்று அதைப் பார்வையிட்டு அங்குள்ள சில பொருள்களை வாங்குவது வழக்கம்! இந்தியத் தூதுவர்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

"ஒரு பெண்ணின் கற்புக்கு யாரால் எப்போது இழுக்கு ஏற்படும் என்பதைச்சொல்ல முடியாது. பீங்கான் பொருளுக்கும் எந்த நேரமும் சேதம் விளையக் கூடும்" என்பது ஒரு பழமொழி. இதை உணர்ந்து சுவீடிஷ்காரர்கள் பீங்கான் பொருள்களை மிகக் கச்சிதமாகவும் செம்மையாகவும் பெட்டிகளில் அடைத்து ஒழுங்காகக் கட்டிக் கொடுத்து வருகின்றனர்.

## 17. அரசியல் நிலை

இங்கிலாந்து போல சுவீடனில் முடியரசுக்குட்பட்ட மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம்—பெரும்பான்மையோரின் ஆதரவுபெற்ற கட்சியின் அமைச்சரவை வாயிலாக—நாட்டை ஆளுகிறது. இது சிறிய நாடாக இருப்பதால், இங்கிலாந்தில் போல பொது அரசியலார் மட்டுமே உண்டு. மாநிலங்கள் கிடையாது. தேர்தல் காலத்தில் மட்டும் அரசியல் பூசல்கள்

இருக்கும். மற்ற நாட்களில், மக்களுக்கு அரசியல் செய்திகளில் ஈடுபாடு கிடையாது.

சுவீடன் ஒரு முடியரசு. 1950-இல், சுவீடனின் மன்னர் குஸ்தாவ் (இப்போதைய மன்னரின் தந்தை) 50 ஆண்டுகள் மன்னராக இருந்து 94 வயதில் மரணமடைந்தார். கடைசி நாட்கள்வரை அவர் வேட்டையாடியும் நீந்தியும் பொழுது போக்கினார். மெய்காப்பாளர் எவரும் இன்றி, தன்னந்தனியாக அவர் எங்கும் சென்று வந்தார். வெளிநாட்டார் ஒருவர் இதைப்பற்றிக் கேட்டபோது சுவீடன் நாட்டிலுள்ள லட்சக்கணக்கான மக்களும் தன்னுடைய மெய்காப்பாளர்தான் என்று அவர் கூறினாராம். அரசரிடம் சுவீடிஷ் மக்கள் கொண்டுள்ள அன்பு இதிலிருந்து புலப்படும். பல தலைமுறைகளாக அரசாண்டு வரும் பேறு இக் குடும்பத்துக்கு உண்டு. பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கும் அரபு நாட்டினர்க்கும் போர் பரவாது தடுத்த காலஞ்சென்ற கவுன்ட்பெர்னடாட்டே இம் மன்னரின் உறவினர் ஆவர். குறிப்பிட்ட நேரங்களில சுவீடிஷ் மன்னருடைய அரண்மனையைப் பொது மக்களும் நம் போன்ற வெளிநாட்டினரும் தங்குதடையின்றிப் போய்ப் பார்க்கலாம்.

சுவீடனில் நம் நாட்டில் போலவே சாலைகளில் இடது பக்கமாகத்தான் போகவேண்டும். அருகேயுள்ள நார்வே, பின்லந்து நாடுகளில் வலதுபக்கப் போக்குவரத்து முறை இருந்து வருகிறது. அதனால் சுவீடனிலும் அப்படிச் செய்தால் நலம் என்று 1954-இல் சிலர் கருதினர். கார், சைக்கிள் ஓட்டுபவர் மட்டுமன்றி, சாலைகளில் நடந்து செல்லுபவரின் உயிரையும் பாதிக்கும் இத்தகைய அடிப்படையான மாறுதலைத் தாமே செய்யச் சுவீடிஷ் அரசியலார் தயங்கினர். முப்பது லட்சம் ரூபாய் செலவு செய்து,

நாட்டு மக்களின் கருத்தை அறிய வாக்குப்பதிவு நடத்தினர். "இருந்தபடியே இருக்கட்டும்" என்று மக்கள் முடிவு கூறினர். சுவீடனில் நிலவும் மக்களாட்சி முறைக்கு இது ஒரு சான்று.

சுவீடிஷ் அரசியலார் நடத்தும் ரயில், தந்தி, டெலிபோன், காடு வளர்த்தல், புகையிலைச் சாகுபடி, மது வழங்குவது ஆகிய தொழில்களால் அவர்களுக்குப் பெரு வருவாய் கிடைக்கிறது. உலகப் போரில் ஈடுபட்டு நஷ்டமடைந்த அண்டை நாடுகளான டென்மார்க்கும் பின்லந்தும் நார்வேயும் மீண்டும் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் குண்டு வீச்சில் சேதப்பட்ட கட்டிடங்களைக் கட்டவும் சுவீடன் பல கோடி குரோனர் உதவியிருக்கிறது.

சுவீடன் உலக அரசியலில் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. 1946-இல் அது ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராயிற்று. இப்போது ஐக்கிய நாடுகள் சபையில் பொதுச் செயலாளராக இருந்து வரும் **டாக் ஹம்மார்ஸ்க ஜோயெல்டு** ஒரு சுவீடிஷ்காரர்.

நினைத்த மாத்திரத்தில், தம் நாட்டைப் பிறரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் சுவீடனுக்கு உண்டு. ஒரு சில நாட்களுக்குள் ஏழரை லட்சம் பேரைப் படையில் சேர்த்துவிட அந்நாட்டு அரசியலாரால் இயலும்! சுவீடனின் விமானப்படை பலம் பொருந்தியது; சுவீடிஷ் விமானங்கள் யாவும் அவர்களால் செய்யப்பட்டவை. சுவீடிஷ் கப்பல் படையும் மட்டமானது அன்று. இங்கிலாந்துக்கு அடுத்தபடி சுவீடனே கப்பல் கட்டுவதில் சிறந்த நிலையை அடைந்திருக்கிறது. திரை கடலோடிப் புது நாடு காணும் முயற்சிகளில் சுவீடிஷ்காரர் பல தலைமுறைகளாக ஆர்வம் காட்டி வந்துள்ளனர். நாட்டு வருவாயில் நான்கில் ஒரு பங்கைப் பாதுகாப்புக்காகச் செலவிடுகின்றனர்.

# 18. இந்தியாவும் சுவீடனும்

இந்தியாவின்மீது சுவீடிஷ் மக்கள் உள்ளன்பு உடையவர்கள். மகாத்மா காந்தியடிகளின் மரணச் செய்தி பிற ஐரோப்பியரைக் காட்டிலும் சுவீடிஷ் மக்களை மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்திற்று. எப்போதும் உலக அமைதியில் உண்மையான ஆர்வமுடைய சுவீடிஷ் மக்கள் உலக அமைதிக்காகவே வாழ்ந்து, அதற்காகவே உயிரையும் நீத்த உத்தமரை இழந்தது பற்றிச் சொல்லொணுத் துயர் அடைந்தது இயற்கைதானே.

சுவீடனில் மது உட்கொள்ளுவதற்குப் பல தடைகள் உள்ளன. மாதம் ஒன்றுக்கு ஆடவர்க்கு நான்கு போத்தல்களும் பெண்டிர்க்கு இரண்டு போத்தல்களும் என்ற பங்கீட்டு முறை 1916 முதல் இருந்து வருகிறது.

சுவீடனுக்கும் இந்தியாவுக்கும் அரசியல் துறையில் கருத்து மாறுபாடோ பகையோ கிடையாது; வெளிநாட்டுக் கொள்கையில் இரு நாடுகளின் நோக்கமும் ஒன்றே.

உற்பத்தியில் சுவீடனின் நிலைக்கும் இந்தியாவின் நிலைக்கும் முரண்பாடு கிடையாது. சுவீடனிலிருந்து ஏற்றுமதியாகக்கூடிய பொருள்கள் யாவும் இந்தியாவுக்குத் தேவைப் படுவனவாக உள்ளன.

சுவீடிஷ் நிபுணர்கள் செய்யும் ஹால்டா டைப்ரைட்டரைச் சென்னையில் உருவாக்கும் ஒரு தொழிற்சாலை கிண்டியில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இங்கு தமிழ் டைப்ரைட்டர்களையும் செய்துவருகிறார்கள்.

சுவீடிஷ் மக்கள் தமிழ் நாட்டில் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் ஒரு மருத்துவ

நிலையம் நிறுவியுள்ளனர். தமிழ் நாட்டின் சிறந்த மருத்துவ நிலையங்களுள் இதுவும் ஒன்று. டாக்டர் கூகல்பர்க் என்ற சுவீடிஷ் கண் வைத்தியர் 1909-இல் இங்கு ஒரு கண் ஆஸ்பத்திரி ஏற்படுத்தினர். இவரிடம் பயின்றவர்களே இப்போது தமிழ் நாட்டில் பல இடங்களில் கண் சிகிச்சை செய்து வருகிறார்கள். அறுவை மருத்துவ நிபுணரான டாக்டர் வால்டன் என்ற சுவீடிஷ்காரரும் இங்கு பணியாற்றி யுள்ளார்; புது வகையான அறுவை சிகிச்சை முறைகளை இந்தியாவில் செய்து காட்டியவர் இவரே. பிள்ளைப்பேறு மருத்துவத்தில் சிறந்தவரான எரிக்சன் என்ற அம்மையார் இன்றளவும் இங்கு பணி புரிந்து வருகிறார்கள். இந்த மருத்துவ நிலையத்திற்கும் இதைச் சேர்ந்த குருடர் பள்ளிக்கும் சுவீடிஷ் மக்கள் பெரும் பொருள் வழங்கியுள்ளனர்; பம்பாயிலுள்ள சுவீடிஷ் தீப்பெட்டிக் கம்பெனியும் நன்கொடை வழங்கி யுள்ளது; இந்த ஆஸ்பத்திரியிலுள்ள இந்திய டாக்டர்கள்—தலைமை டாக்டரும் இந்தியர்தான்—சுவீடனில் போய்ப் பயிற்சி பெற்று வருகின்றனர். இம்மருத்துவ நிலையத்தின் பணியை மகாத்மா காந்தியடிகளே நேரில் பார்த்துப் பாராட்டியுள்ளார்.

சுவீடனின் தலைமை அமைச்சர் 1959-இல் தமிழ் நாட்டுக்கு வந்திருந்தார். அவருக்கு வியப்பாகத் தெரிந்தவை—வண்ணார்கள் கல்லில் துணிகளை அடித்துத் துவைப்பதும் சந்தைகளில் மாடு விற்கும் முறையும்!

சுவீடிஷ்காரர்கள் அண்மையில்தான் இந்தியாவைப் பற்றி ஓரளவு செய்திகள் தெரிந்து கொண்டுள்ளனர். இந்தியாவில் எல்லோருமே சம்ஸ்கிருத மொழி அறிந்தவர் என்ற எண்ணம் சில ஆண்டுகளுக்கு முன்வரை நிலவி வந்தது. அந்த மொழி நூல்கள் சிலவற்றை எடுத்து வந்து


என்னிடம் சிலர் விளக்கம் கேட்டபோது, எனக்கு வட மொழி தெரியாது என்று யான் கூறியதை அவர்கள் நம்ப வில்லை. இந்தியர் ஒவ்வொருவரும் வெளி நாட்டினர்க்கு இந்திய மொழியிலேயே கடிதம் எழுத வேண்டும் என்று சுவீடனில் பலர் கூறினர். அண்ணன்-தம்பி, ஏன் கணவன்–மனைவிகூட தமக்குள் ஆங்கிலத்தில் எழுதிக்கொள்ளும் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அவர்களிடம் சொல்லி மேலும் அவமானப்பட விரும்பவில்லை! வெளி நாட்டினருடன் பழகும்போது, இப்படித்தான் நம் குறைபாடுகள் சிலவற்றை மூடிமறைக்க நேரிடுகிறது.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுவீடன் கீழ் நிலையிலிருந்தது; வாழவகையின்றிப் பத்து லட்சம் மக்கள் அமெரிக்காவுக்குக் குடியேறினர்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளில்தான், சுவீடன் உயர்நிலை அடைந்திருக்கிறது. கைதேர்ந்த தொழிலாளர், ஈடு இணையற்ற பொறி இயல் அறிஞர், புகழ்பெற்ற விஞ்ஞானிகள், நாணயமான அலுவலர், நிலைத்த நீடித்த அமைச்சரவையினர் இவர்களே சுவீடனுக்குப் பெருமை தந்திருக்கின்றனர். உற்பத்திப் பெருக்கத்துக்கு ஊறு விளைக்கும் சச்சரவுகள் அங்கு இல்லை. மலிவான மின்சார வசதியும், தொழிலாளரிடையே அமைதியும் எல்லா நாடுகளுடனும் நல்லுறவுடன் வாழும் மனப்பாங்கும் சுவீடனில் காணப்படுகின்றன. உணவுத் தேவைக்குப் பிற நாட்டினரை எதிர்பாராமல் சுவீடிஷ் மக்கள் தங்களுக்கு வேண்டுவதைத் தாமே விளைவித்துக் கொள்கின்றனர். நம் நாட்டுக்கும் இவை அனைத்தும் வேண்டும். இவை இருந்தால் இந்தியாவும் இந்த வையத்து நாட்டிலெல்லாம் உயர்வுற்று, வறுமை நீங்கி வாழலாம்.

# BIBLIOGRAPHICAL DATA



| | |
|---|---|
| Author's Name : | S. M. L. LAKSHMANAN CHETTIAR (SOMALAY, pseud.) |
| Title : | SWEDEN<br>Vol. 2 in a series of books on 'Countries of the World' |
| Language : | Tamil |
| Edition : | First |
| Place of Publication : | Madras |
| Publishers' Address : | PAARI NILAYAM, 59, Broadway, Madras-1 |
| Price : | 50 nP. |
| Year of Publication : | (June) 1960 |
| Pagination : | 48 |
| Size of the Book : | 18.3 Cm. |
| Library Classification: | Dewey 914.85 |
| Brief Indication of Contents : | The book gives basic information about Sweden, a map and two pictures. |



உலக நாடுகள் பல. அங்கு வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள், கால நிலை, வாழ்க்கை நிலை, அரசியல் அமைப்பு முதலியனவும் வெவ்வேறானவை. இவை பற்றி அலுப்பின்றி—அதிகச் செலவின்றி-படித்தறிய உதவுகிறது உலக நாடுகள் என்ற இச்சிறு நூல் வரிசை.

உலகம் சுற்றிய தமிழர் - பல பிரயாண நூல்களின் ஆசிரியர் - தெளிவுடனும் சுவையுடனும் எழுதும் இயல்புடைய திரு ''சோமலெ'' இந் நூல்களை எழுதுகிறார்.

முதலில் கனடா, குவாயிட், தாய்லந்து, சுவீடன், பிரான்ஸ் பற்றிய ஐந்து நூல்கள் வருகின்றன. இவ்வரிசையில் இன்னும் பல நூல்கள் வெளி வரும்.




# பாரி நிலையம்

**59, பிராட்வே, சென்னை - 1**

Wrapper Printed at Neo Art Press, Madras - 2